**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.47/2015**
**Deposition of witness for prosecution –PW–7**

| | | |
|---|---|---|
| Name | : | ராஜு |
| Father Name | : | சுப்ரமணியன் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | காவல் துறை கண்காணிப்பாளர் |
| Religion | : | |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 12th day of November 2025.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தூத்துகுடி மாவட்டம் குற்றபிரிவில் காவல் துறை துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.09.2010 ம் தேதி நான் தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது குற்ற எண் 109/2010 பிரிவு 279, 304 (A) இதசன் படி சார்பு ஆய்வாளர் செல்வராஜ் கொடுத்த முதல் தகவல் அறிக்கை யை பதிவு செய்து கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆகும். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகும். எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பூமிராஜ், ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.. பின்பு சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, கௌதம், கணேசன், ராஜபாண்டி, மகேந்திரன், ஜெயபாலன், லதா, பூமிராஜ், ராஜேந்திரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் இருந்த இறந்து போன சதீஷ்குமாரை பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும். 14.10.2010 ம் தேதி வழக்கின் விபத்துகள்ளான வாகனம் TN65J5253 Auto மற்றும் மற்றொரு

வாகனம் TN67L0349 டிராக்டர் வாகனத்தில் வாகன ஆய்வுக்குட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அந்த ஆட்டோவுக்கான ஆய்வறிக்கை அ.சா.ஆ.7, டிராக்டரின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.8. மோட்டார் வாகன ஆய்வாளர் கருப்பணனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்த நபரான சதீஷ்குமாரை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் மனோஜ்குமார் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். அந்த பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.9 ஆகும். மேலும் அரசு மருத்துவர் திவாகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆகும். மேலும் சாட்சிகள் முத்துகுமார், காவலர் ஜடாமுனி, சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு எனது புலன் விசாரணை யை முடித்து எதிரி மீது அதே பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு கு.வி</u>

முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் யாரும் சம்பவத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தில் எதிரி ஓட்டி வந்ததாக சொல்லும் டிராக்டரின் உரிமையாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் இல்லை. ராஜாகனி என்பவரை விசாரித்தால் தான் டிராக்டரின் எதிரி டிரைவராக செயல் பட்டார் என்பது தெரியவரும் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெறும் நேரம் இரவு 07.00 மணி இருட்டு என்றால் 07.00 மணி முதல் 07.30 மணி வரை இருக்கும். எதிரி குறித்து அடையாள அணி வகுப்பு நடத்தினேனோ என்றால் இல்லை. எதிரி ஓட்டி வந்ததாக சொல்லும் டிராக்டரில் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் எவ்வித சேதமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.